முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1413

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.08.2023**, சனிக்கிழமை

1. கருணையே வடிவான குருஅரங்கனே
கண்ணியமிக்க தொண்டர் படைகளை
பேருலகமெல்லாம் நிரப்ப வேண்டி
புண்ணியத்தை விதையாக்கி உலகெலாம் தூவி
2. தூவியே அற்புதம் நடத்துகின்ற
தர்மனே குருராஜனே அரங்கனே
பெருமைபட உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
3. இனிதே அரங்கன் சக்தி பலம் கூட
இயம்பிடுவேன் சோபகிருது நள்ளி திங்கள்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 27 ம் நாள், 12.08.2023 சனிக்கிழமை)
துணிவுபட அரங்கன் தொண்டர்படை
தேசமெல்லாம் நிரம்பும் வகையில்
4. கனிவேலவன் யான் சூட்சும சேவையாற்றிவர
கருணை கொண்டு அரங்கன்
கரம் பட தீட்சை
கலியுகத்தில் ஏற்பவர்கள் எல்லோரும்
5. எல்லோரும் என்னருள் பெற்று
இயம்பிடுவேன் ஞானிகளாவரப்பா
வல்லமைகொண்ட தர்மத்தை
வளர்க்கின்ற அரங்கன் சேவை
6. வையகமெல்லாம் எட்ட எட்டவே
வளர்ச்சிகண்டு இந்த சன்மார்க்கம் தழைத்து
தளர்வின்றி உலகத்தலைமை மாற்றி
தரணியெங்கும் ஞான பலம் கூட்டி அருளும்

7. அருளவே அரங்கன் தொடர்பு கொண்டால்தான்
அகிலத்தார்க்கு ஞான பலமாக மாறும்
வரங்கள் அரங்கன் குடில் நாடி பெற்றால்தான்
வையகத்தில் ஞான ஆட்சியே மலரும்

8. மலருகின்ற பேரற்புதத்தை முகமலர்ச்சியோடு அரங்கன் உலகோர்க்கு
வளருகின்ற வண்ணம் வரமாகத் தந்து வர
வையகத்தில் உலகோர் நாடி அரங்கன் தீட்சைபெற்றால்
நன்மைகூடி இந்த உலகில் அற்புதம் நடத்த நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–